සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

jhU m<d;a wOHdmk fomd¾;fika;=jProvincial Department of Education - NWP

## வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
## Provincial Department of Education - NWP

**மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 06 - 2023 (2024)**
**Third Term Test - Grade 06 - 2023 (2024)**

# குடியுரிமைக்கல்வி

நேரம்: 2 மணி.

சுட்டெண் :

### பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **பகுதி I வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்**
- **வினா 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்குரிய விடையினை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து எழுதுக.**

**(செயற்பாடுகளை / தன்னம்பிக்கை / பாடசாலை / சிறப்பான / தேர்ச்சிகளை)**

1. வீட்டுக்கு அடுத்த படியாக பிள்ளைகளுக்கு பரிச்சயமிக்க இடமாக இருப்பது ............................ சூழல் ஆகும்.
2. எல்லா மாணவ மாணவிகளும் செயலூக்கம் நிறைந்த அங்கத்தவராக செயற்பட தேவையான ................................ பாடசாலை வழங்குகிறது.
3. இணைப்பாடவிதான ................................ செய்வதற்கும், அதனை மேற்பார்வை செய்வதும் பாடசாலை அதிபரின் கடமையாகும்.
4. பொறுமையாக இருப்பது மாணவர்களிடம் காணப்படக்கூடிய ................................ அம்சமாகும்.
5. திட்டமிட்டு செயற்படும் மாணவர்களிடத்தில் ................................ உருவாகும்.

- **6 - 10 வரையான வினாக்களிலுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் முன்னாலுள்ள அடைப்பினுள் இடுக.**

6. பாடசாலை இலட்சினை உருவாக்கத்தின் போது நிறங்களும், குறியீடுகளும் கவனிக்கப்படும். (   )
7. உங்கள் பலவீனங்களை சுட்டிக்காட்டும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது சிறப்பான பண்பாகும். (   )
8. பாடசாலை கலாசாரத்தை வெளிப்படுத்தும் அடையாளங்களில் ஒன்று பாடசாலைக் கொடி ஆகும். (   )
9. பாடசாலை சமூகத்தில் வேற்றுமைகள் பல காணப்படினும் அனைத்து உறுப்பினர்களுக்கும் சமமான உரிமைகள் உண்டு. (   )
10. நன்நடத்தை உள்ள பிரசை பாடசாலையில் உருவாக்கி விடுதல் சமூகத்துக்கு செய்யப்படும் சிறப்பான சேவையாகும். (   )

- **11 - 15 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் மிகச் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. பாடசாலை மாணவன் அல்லது மாணவி தமது திறமைகளை இனம் கண்டு அதனை முன்னேற்றுவதற்கு செய்யக்கூடிய வேலைகளில் ஒன்று?
    i. தமது திறமைகள் சம்பந்தமாக விசுவாசமின்றி செயற்படல்
    ii. தாம் விருப்பமில்லாத விடயத்தை அதிக அதிகமாக செய்தல்
    iii. தாம் விருப்பமான விடயத்தை அறிந்து அதிகமாக செய்தல்
    iv. தமக்கு முடியுமான விடயத்தை விளக்கமின்றி செய்தல்.

12. இலங்கையில் மாகாண வேறாக்கத்தின் கீழ் மேல் மாகாணம் அடங்கும் மாவட்டங்கள் ஆவன,

i. களுத்துரை, குருநாகல், கொழும்பு
ii. கம்பஹா, கம்பொல, அநுராதபுரம்
iii. மாத்தளை, கண்டி, களுத்துரை
iv. கம்பஹா, கொழும்பு, களுத்துரை

13. மனித வளங்களை முறையாக பயிற்றுவிப்பதன் மூலம் பெறப்படும் அனுகூலங்களில் ஒன்று

i. நாட்டில் அபிவிருத்தி ஏற்படல்
ii. தொழில் வாண்மை விருத்தி செயலிழப்பு ஏற்படல்
iii. பொருளாதார வீழ்ச்சி ஏற்படல்
iv. தொழில் தேர்ச்சி குறைதல்

14. தொற்று நோய் கட்டுப்பாடு, சிகிச்சையளித்தல் போன்றவற்றை மேற்கொள்ளும் அலுவர்,

i. பிரதேச செயலாளர்
ii. பொது சுகாதார பரிசோதகர்
iii. பொலிஸ் அலுவலர்
iv. பிரதேச சபை தவிசாளர்

15. கீழ் வரும் கூற்றுக்களில் பொருந்தாத கூற்றினை தெரிவுசெய்க.

i. குப்பை கூழங்களை அகற்றுதல், தமது பிரதேசத்துக்குரிய பாதைகளை துப்பரவு செய்தல் பிரதேச சபைக்குரிய பொறுப்பாகும்.
ii. தமக்கு விருப்பான அபேட்சகர் பற்றி விளம்பர அட்டைகள் விநியோகிப்பது கிராம அலுவலரின் கடமையாகும்.
iii. இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது மத நிறுவனங்களின் பணியாகும்.
iv. அவசர விபத்துக்களின் போதும், உதவி செய்வது வைத்தியசாலை பணியாளர்களின் கடமையாகும்.

- **வினா 16 முதல் 20 வரையான வினாக்களுக்கான விடைகளை தரப்பட்டுள்ள படத்தினை அடிப்படையாக வைத்து விடை எழுதுக.**




16. A படத்தில் காட்டப்படும் படத்தின் பெயர் யாது?

..............................................................................

17. A படத்தில் குறிப்பிடப்படும் அந்த இடம் பிரசித்தம் பெறக் காரணம் யாது?

..............................................................................



18. B படத்தில் காணப்படும் வரலாற்று மிக்க இடம் என்ன?

..............................................................................

19. B படம் காணப்படும் மாவட்டம் யாது?

..............................................................................

20. B படம் குறிப்பிடப்படும் இடத்தினை அரசாட்சி செய்த மன்னன் யார்?

..............................................................................

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது..**
- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்க.**
**முதலாம் வினாவுக்கு 16 புள்ளிகளும், ஏனைய வினாக்களுக்கு 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01. i. உங்களது பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தில் இருந்து சரியாக அறிந்து கொள்ளக்கூடிய விடயங்கள் 2 தருக?

1 .............................................. 2 .............................................. (பு. 2)

ii. பாடசாலை மாணவன் அல்லது மாணவி என்ற ரீதியில் உங்களிடம் காணப்படும் பலவீனங்களை குறைத்துக் கொள்ள செய்யும் செயற்பாடுகள் 2 எழுதுக?

1 .............................................. 2 .............................................. (பு. 2)

iii. 5ம் தர புலமைப்பரிசில்பரீட்சை சித்தியெய்துவது பெரும் சவாலாகும். நீங்கள் இச்சவால்களை வெற்றி கொள்ள செய்த விடயங்களை அட்டவணையில் குறிப்பிடுக?

| | |
|---|---|
| சவால்களை வெற்றி கொள்ள செய்த விடயங்கள் | 1.<br>2.<br>3. |
| உங்களுக்கு கிடைத்த பெறுபேறு | 1.<br>2.<br>3. |
| பெற்றோருக்கு கிடைத்த பெறுபேறு | 1.<br>2.<br>3. |

(பு. 9)

iv. நீங்கள் சவால்களை வெற்றி கொள்ளுவதற்கு பாடசாலைகளில் விருத்தி செய்து கொள்ளக்கூடிய விடயங்கள் 3 தருக. 1................................ 2................................ 3 .............................. (பு 3 )



02. (i) ஒவ்வொரு பாடசாலைக்கும் பாடசாலை கீதம் காணப்படும். பாடசாலை கீதத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் 3 தருக. (பு. 3)

1. ........................................ 2. ...................................... 3. ...............................

(ii) உங்கள் பாடசாலையில் பாடசாலை இலச்சினைகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 4 தருக. (பு. 4)

1. .......................................................... 2. ......................................................
3. .......................................................... 4. ......................................................

(iii) A படத்தினை நன்கு அவதானித்து அதன் மூலம் மாணவர்களாகிய உங்களுக்கு கிடைக்கும் நன்மைகள் 4 தருக? (பு. 4)

1. .......................................................... 2. ......................................................
3. .......................................................... 4. ......................................................

03. கீழே காட்டப்படும் அட்டவணையை பூரணப்படுத்துக.

(i)

| நிர்வாக அலகு | நீங்கள் வாழும் பிரதேசம் | உங்கள் பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் |
|---|---|---|
| கிராம அலுவலர் பிரிவு | ........................................................ | ............................................................ |
| பிரதேச செயலாளர் பிரிவு | ........................................................ | ............................................................ |
| மாவட்டம் | ........................................................ | ............................................................ |

பு. 6

(ii) A. வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல்
B. நூலக வாசிப்பறை நடாத்துதல்
C. ஓய்வூதிய சம்பளம் பெற முடிதல்
D. நீர் வழங்களை மேற்கொள்ளல்
E. கட்டிடங்களை கட்ட அனுமதி வழங்குதல்.

மேலே காட்டப்பட்டுள்ளவற்றை கீழ் வரும் அட்டவணையில் பூர்த்தி செய்க. பு. 5

| பிரதேச செயலக கடமைகள் | நகர சபையின் கடமைகள் |
|---|---|
| | |
| | |
| | |

04. (i) சூரிய ஒளிகள் மூலம் கிடைக்கும் நன்மைகள் 2 தருக. (பு. 2)

1. ........................................................ 2. ....................................................



A



B

(ii) மேலே A B படத்தில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் மனித தேவைக்காக பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் ஆகும். இவ்வாறு இயற்கை வளங்களை பயன்படுத்துவதால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் 3 தருக.

1. .................................................... 2. ..................................................... 3. ................................................. (பு. 3)

(iii) A. வீடு கட்டுதல்

B. பயிர்செய்கை மேற்கொள்ளுதல்

C. கிணற்றிலிருந்து நீர் பெறல்

D. கைத்தொழில் பேட்டை உருவாக்குதல்

E. அபிவிருத்தி நடவடிக்கை

F. வீடமைப்பு திட்டம்

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களை வைத்து கீழ்வரும் அட்டவணையில் எழுத்துக்களை குறிப்பிடுக.

| தனிநபர் தேவை | சமூகத்தேவை | பொருளாதார தேவை |
|---|---|---|
| .................................................... | ........................................ | ............................................................ |
| .................................................... | ........................................ | ............................................................ |

(பு. 6)

05. (i) மொழியை பயன்படுத்தும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் 3 தருக.

1 …………………………… 2…………………………… 3…………………………… (பு. 3)

(ii) சுமூகமான உரையாடலின் பண்புகள் 4 தருக

1. ……………………………….. 2…………………………………….

3. ………………………………… 4……………………………………. (பு. 4)

(iii) கௌரவமான மொழியைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் 4 தருக.

1. ……………………………….. 2. …………………………………….

3. ………………………………… 4. ……………………………………. (பு. 4)

06. (i) ஒழுக்கமும் நன்னடத்தையும் உள்ள ஒருவரிடத்தில் காணக்கூடிய பண்புகள் 3 தருக.

1 …………………………… 2…………………………… 3…………………………… (பு. 3)

(ii) நன்னடத்தை ஒழுக்கக்கட்டுப்பாடு என்பவற்றை விருத்தி செய்யத்தேவையான பண்புகள் 4 எழுதுக?

1. ……………………………….. 2. …………………………………….

3. ………………………………… 4. ……………………………………. (பு. 4)

(iii) சிறந்த ஒழுக்க மாண்புகளை பேணுவதன் முக்கியத்துவம் 4 குறிப்பிடுக.

1. ……………………………….. 2. …………………………………….

3. ………………………………… 4. ……………………………………. (பு. 4)

07. (i) வீட்டில் மின்சார வீண்விரயத்தை தவிர்க்க உங்களால் செய்யக் கூடியவைகள் 2 தருக?

1……………………………….. 2……………………………………. (பு. 2)

(ii) வளங்களின் வீண்விரயத்தை தடுப்பதால் ஏற்படும் நன்மைகள் 2 தருக?

1……………………………….. 2……………………………………. (பு. 2)

(iii) A நிரலில் உள்ளவற்றுக்கு பொருந்தக்கூடிய விடயங்களை B நிரலில் இருந்து தெரிந்து இணைக்குக.

| <u>**நிரல் A**</u> | <u>**நிரல் B**</u> |
|---|---|
| 1. சமூகத்தால் செயற்படுத்தப்படும் நற்கருமங்களில் ஒன்று | A - சம்பிரதாயங்கள் |
| 2. எமது முன்னோர்களிடமிருந்து கைமாற்றப்பட்டவை | B - சிரமதானம் |
| 3. இலாப நோக்கமற்ற வகையில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் | C - ஆக்கப்பட்ட(நிர்மாண)சூழல் |
| 4. நகம் கடித்தல் | D - தேசிய உற்பத்தி |
| 5. பெற்றோருக்கு மரியாதை செலுத்துதல் | E - பொதுச்சேவை |
| 6. அதிவேகப் பாதை | F - துர்நடத்தை |
| 7. பன் பொருட்கள் | G - கடமை |

(பு. 7)